செ.வெ.எண்: 166 நாள்: 12.03.2021

**பத்திரிக்கை செய்தி**

---

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்கள் எதிர்வரும் 06.04.2021 அன்று நடைபெறுவதை முன்னிட்டு, வேட்புமனு தாக்கல் 12.03.2021 முதல் துவங்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 178 கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி(தனி)க்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகமாக கந்தர்வகோட்டை வட்டாட்சியர் அலுவலகமும், 179 விராலிமலை சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகமாக இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகமும் செயல்படுகிறது.

அதேபோன்று 180 புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகமாக புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகமும், 181 திருமயம் சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகமாக திருமயம் வட்டாட்சியர் அலுவலகமும், 182 ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகமாக ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகமும், 183 அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகமாக அறந்தாங்கி சார் ஆட்சியர் அலுவலகமும் செயல்படுகிறது. எனவே வேட்புமனு தாக்கல் செய்ய விருப்பமுள்ள நபர்கள் சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் தக்க ஆவணங்களுடன் வேட்புமனுவினை தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**